**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் வியாழன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திரு.G.வீராங்கன், கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.35/2022** வா.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சங்கர் | **வயது** | : | 61 |
| **த.பெ** | : | முருகேச பிள்ளை | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | படியம்பட்டு | **தொழில்** | : | விவசாயம் |

**05.03.2026 – வா.சா. 2 குறுக்கு விசாரணை**

1)நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் போட்டேன், அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதிகளின் தந்தை எனக்கு என்ன உறவு முறை என்றால் சொந்தகாரர் இல்லை, ஒரே ஊர் தான். வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், சர்வே நெம்பர், ஆகிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் நிலத்தகராறு என்று தெரியும், வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் ஆகிய விவரங்கள் எனக்கு தெரியாது. வாதிகள் அனுபவித்து வரும் சர்வே நெம்பர் பற்றி எனக்கு தெரியாது என்றால் தெரியாது. தாவா சர்வே நெம்பர் யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியாது எ்னறால் அண்ணாமலை பெயரில் இருந்தது.

2)பிரதிவாதியின் நிலமும், வாதிகளின் தந்தை திருப்பதி தேவஸ்தானத்திற்கு எழுதிகொடுத்த நிலமும் அருகில் உள்ளது என்றால் சரிதான். வாதிகளின் தந்தை திருப்பதி தேவஸ்தானத்திற்கு எழுதிகொடுத்த சொத்தை தற்போது வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். திருப்பதி தேவஸ்தான சொத்தை அனுபவித்து வருகிறார்களா அல்லது வேறு சொத்தை அனுபவித்து வருகிறார்களா என்றால் திருப்பதி தேவஸ்தானத்திற்கு 1 ஏக்கர் சொத்தையும், அண்ணாமலை பெயரில் 32 செண்ட் இருந்தது, மேற்படி 2 சொத்துக்களையும் வாதிகள் அனுபவித்து வருகிறார்கள். மேற்படி திருப்பதி தேவஸ்தானத்திற்கு 1 ஏக்கர் சொத்தையும், அண்ணாமலை பெயரில் 32 செண்ட் இருந்ததுஎன்று யார் என்னிடம் கூறினார்கள் என்றால் யாரும் என்னிடம் கூறவில்லை, அண்ணாமலை ஒரே ஊர்காரர், அண்ணாமலை குடும்பத்தார் பேசிக்கொள்ளும்போது நான் கேட்டுக்கொண்டேன்.

3)மற்றபடி எனக்கு மேற்படி சொத்துக்களின் ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் தெரியாது. 2021 ல் வாதிகள் போலிஸில் புகார் அளித்து நான் சென்றிருந்தேனா என்றால் சென்றிருந்தேன், 1 ம் பிரதிவாதி வாதிகளின் நிலத்தை அளந்ததால் பிரச்சனை ஏற்பட்டது. 2022 ல் பஞ்சாயத்து நடைபெற்றதாக நான் கூறியுள்ளேன், நானும் உடன்சென்றிருந்தேன் என்று கூறியுள்ளேன், யார் முன்னிலையில் பஞ்சாயத்து நடைபெற்றது ஆகிய விவரங்கள் நான்

கூறியுள்ளேனா என்றால் இல்லை. என்ன பரிகாரம் கோரி வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது. 2ம் வாதியான அமுதா இந்த நீதிமன்றத்தில் என்னை சாட்சியம் அளிகக் அழைத்ததால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். மற்றபடி இந்த வழக்கு சம்மந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் தெரியாது.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.03.05 17:38:35 +0530

District Munsif,
Polur.